DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.286/2023 | Deposition of Witness for : PW4 |
| Name : பெர்லின் | Father/Husband Name : கனகராஜ் |
| Age : 32 | Village : கடாட்சபுரம் |
| Taluk : சாத்தான்குளம் | Calling : Electrician தொழில் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05 March 2026.

Accused A1 to A3 absent. Petition U/s.355 BNSS filed and allowed.

**<u>முதல் விசாரணை</u> :–**

1. நான் தற்போது கடாட்சபுரத்தில் குடியிருந்து Electrician தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 30.05.2023 ஆம் ஆண்டு காலை 10.30 மணியளவில் வழக்கின் சம்பவ இடத்தில் போலீசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். அதில் நானும் என்னுடன் ஜெகன் என்பவரும் கையொப்பம் செய்தோம். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

2. நான் எத்தனை கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் ஒரு கையெழுத்து செய்து கொடுத்தேன். போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்து கொடுத்த அ.சா.ஆ.2 ல் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் போலீசார் சொல்லக்கேட்டு எனக்கு தெரியும், நான் அந்த ஆவணத்தை வாசித்துப் பார்க்கவில்லை. 1 ஆவது எதிரி என் மேல் மெஞ்ஞானபுரம் காவல்நிலையத்தில் புகார் அளித்து நான் நீதிமன்ற காவலில் இருந்தேனா என்றால் இந்த வழக்கு சம்பவம் நடைபெற்ற பிறகு 1 ஆவது எதிரி என் மேல் புகார் அளித்தார். எங்களுடைய ஊரில் உள்ள CSI சர்ச்சில் அடிக்கடி தேர்தல் தொடர்பாக பிரச்சனை ஏற்படும் என்றால் சரியல்ல. எனக்கு எந்த சம்பவமும் தெரியாது என்றாலும் எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை



DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.03.05 18:25:05 +0530

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.03.05 18:25:10 +0530

Judicial Magistrate, Sathankulam.